**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>**

**<u>STC. No.45/2016</u>**

2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி –06 திரு.அருள்கண்ணன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.ஜெ.லதா கிரேடு–3 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அருள்கண்ணன் | வயது | |
| த.பெ/ க.பெ. | : | | தொழில் | : |
| ஊர் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | சாதி | : |

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

1) நான் இலையூர் கண்டியங்கொல்லையில் வசிக்கிறேன். நான் வாள்பட்டறை வைத்து வேலை செய்து வருகிறேன். அசா1 கலியபெருமாளை எனக்கு தெரியும், சுமார் 5மற்றும் 6 வருடங்களுக்கு ஒரு நாள் எங்கள் ஊரைச்சேர்ந்த கலியபெருமாளுக்கு விபத்து ஏற்பட்டது தொடர்பாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதில் என்ன எழுதியிருந்ததது என்று எனக்கு தெரியாது வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் சம்பவ இடத்திற்கு வந்து போனது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் இல்லை. இந்த வழக்கில் யார் காயம் பட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் போலிசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும் நானும் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் எங்கள் உறவினர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/....ஆர்.இராஜசேகரன்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,

ஜெயங்கொண்டம்.